JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW-2 Witness
for Prosecution

CC No. 69/2021 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-2- ரவிக்குமார் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of August 2025 | | | |

**1, 2, 3, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 4 மற்றும் 5 எதிரிகள் (இறப்பு)**

**முதல் விசாரணை**

நான் கோயம்புத்தூர் அவிநாசி சாலை டாக்டர் ஜெகநாதன் நகரில் குடியிருந்து கொண்டு டெக்ஸ்டைல் மிஷினரி ஏற்றுமதி இறக்குமதி தொழில் செய்து வருகிறேன். அ.சா.ஆ.1 ஜெயக்குமார் எனது சகோதரர் ஆவார். பட்டியல் சாட்சி -4 துளசிதாஸ் எனது சகோதரர் ஜெயக்குமாரின் நண்பர் ஆவார். அவர் இரிடியம் உள்ளது என்றும் அதை வாங்கினால் நிறைய பணம் கிடைக்கும் என்று கூறி எனது சகோதரரிடம் கூறினார். எனது சகோதரர் ஜெயகுமார் இரிடியம் வாங்குவதற்காக எதிரிகள் ரமேஷ் ரூ.25,00,000/- ரூபாய் பணமும், பட்டியல் சாட்சி -4 துளசிதாஸ் அவரது வங்கியான கோயம்புத்தூர் கரூர் வைஸ்யா வங்கியிலிருந்து எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் ஆகியோர்களுக்கு ரூ.20,00,000/- பணமும் அனுப்பி இருந்தார்கள். மேற்படி பணமானது ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் சொன்ன வங்கி கணக்கு எங்களுக்கு அவர்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டதாக எனது சகோதரர் கூறினார். அதன்படி எதிரிகள் இருவரும் எனது சகோதரருக்கும், துளசிதாசிற்கும் இரிடியத்தை காட்டவும் அல்லது அந்த பணத்தை திருப்பித் தரவும் முன்வரவில்லை. பின்னர் கடந்த 11/12 /2015ஆம் தேதியன்று எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் இருவரும் செம்புளிச்சாம்பாளையத்தில் உள்ள தேவன் தோட்டத்தில் இருப்பதாக எனது சகோதரர் ஜெயக்குமாருக்கு தகவல் வந்ததாக என்னிடம் கூறினார். எனக்கு சகோதரர் என்னிடம்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.25 07:04:59 +0530

செம்புளிச்சாம்பாளையம் வருமாறு கூறியதன் பேரில் நான் ஜெயக்குமார் ரங்கநாதன், பாலதண்டபாணி, ராஜேந்திரன் மற்றும் ராஜா தெக்கன் ஆகியோர்கள் செம்புளிச்சாம்பாளையத்தில் உள்ள தேவன் தோட்டத்திற்கு வந்தோம். அப்போது அங்கிருந்த எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமாரிடம் ஜெயக்குமார் நாங்கள் கொடுத்த பணத்தை கொடுங்கள் அல்லது நீங்கள் கூறியவாறு இரிடியத்தை கொடுங்கள் என்று கேட்டோம். அதற்கு எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் ஆகியோர்கள் எங்களை தகாத வார்த்தைகளால் திட்டி நீங்க கோயம்புத்தூருக்கு ஒழுக்கமாக போய் சேர முடியாது பாத்துக்கோங்க என்று எங்களை மிரட்டினார்கள். பின்னர் நானும், எனது சகோதரர் ஜெயக்குமார் மற்றும் எங்களுடன் கோயம்புத்தூரில் இருந்து வந்த மற்ற 4-5 நபர்கள் நபர்களும் சென்று ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் அளித்தோம். பின்னர் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள். எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் ஆகியோர்களை எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும். எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால், டெக்ஸ்டைசில் இயந்திர சாதனம் தொழில் செய்து வருகிறேன். எனது எனது அண்ணன் ஜெயக்குமாரிடம் இரிடியம் தொழில் செய்யலாம் என்று துளசிதாஸ்தான் கூறினார் என்றால், சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், துளசிதாஸ் சொல்லித்தான் எனக்கு தெரியும். இரிடியம் பொருள் வாங்குவது மற்றும் விற்பது தவறு என்று எனது அண்ணனிடம் கூறினேன் என்றால், நான் கூறினேன். எனது அண்ணன் பணம் அனுப்பிய சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். எனது அண்ணன் கூறித்தான் எனக்கு தெரியும்.

துளசிதாஸ் பணம் அனுப்பியது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நான் செம்புளிச்சாம்பாளையம் சென்றிருந்தபோது எதிரிகள் ராஜேந்திரன், ராஜா தெக்கன் மற்றும் பாலதண்டபாணி எங்களுடன் கூட வந்தார்கள் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். போலீசில் புகார் கொடுக்கும்போது அங்குதான் 1 மற்றும் 2ம் எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றால், சரிதான். அதேபோல் ராஜேந்திரன், ராஜா தெக்கன் மற்றும் பாலதண்டபாணி ஆகியோரை அழைத்து சென்றுதான் புகார் கொடுத்தேன் என்றால், சரிதான். எனது அண்ணன் kian fin Service நிறுவனத்திற்கு பணம் அனுப்பியது எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரியல்ல. ஆனால் எந்த கம்பெனிக்கு அனுப்பினார் என எனக்கு தெரியாது.

போலீசார் விசாரணையில் சம்பவயிடத்தில் எங்களை 7 எதிரிகளும் மிரட்டினார்கள் என்று

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.25 07:05:11 +0530

சொல்லியுள்ளேன் என்றால், நான் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 ஜெயக்குமார் எனது அண்ணன் சொல்லிதான் தெரியும் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், செம்புளிச்சான்பாளையத்தில் எதிரிகள் மிரட்டவில்லை என்றாலும், துளசிதாஸ் மற்றும் கோபியைச் சேர்ந்த செல்வம் என்பவரும் தான் இரிடியம் வாங்க உங்களது அண்ணனை அணுகினார் என்றாலும், எதிரிகளிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எனது அண்ணன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.25 07:05:19 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.